# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் நாள், வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

**<u>நிகழ்ச்சி நிரல்</u>**

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி நகராட்சி 01.06.1994 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இம்மாநகரம், மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டின் நான்காவது பெரிய நகரமாகவும், தமிழ்நாட்டின் மையப்பகுதியில் கிழக்கு, மேற்கு, தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளை ஒன்றடக்கிய சாலைகளின் மைய புள்ளியாக அமைந்துள்ளது. 2011ம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இம்மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகை 9,16,857 ஆகும். தற்போதைய உத்தேச மக்கள் தொகை 10,21,000 ஆகும். நகரின் மொத்தப் பரப்பளவு 167.23 சதுர கி.மீ. ஆகும்.

இம்மாநகரத்தில் மக்கள் தொகை அதிகரிப்பு பத்தாண்டுகளுக்கு ஒரு முறை சராசரியாக 11.45 சதவீதமாக உள்ளது. மத்தியப் பேருந்து நிலையமானது 15.08.1972 முதல் செயல்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலையமானது ஆரம்பக் கட்டத்தில் சுமார் 3.9 ஏக்கர் பரப்பளவில் 43 பேருந்துகளை நிறுத்தம் செய்யும் அளவில் அமையப்பெற்று இருந்தது. அதன் பின்னர் இப்பகுதியினை ஒட்டிய இரயில்வே துறைக்குச் சொந்தமான 2.76 ஏக்கர் நிலத்தினை ரூ.5.66 கோடிக்கு கிரயம் மூலம் பெற்று விஸ்தரிப்பு செய்யப்பட்டு, 21.06.2006 முதல் கூடுதலாக 34 பேருந்துகள், ஆக மொத்தம் 77 பேருந்துகள் நிறுத்தம் செய்யும் வகையில் அமைக்கப்பட்டு, அதன் மூலமாக தற்போது நாளொன்றுக்கு 2,245 பேருந்துகள் இயக்கப்பட்டும், 7975 முறை பேருந்துகள் வந்து செல்லும் இடமாகவும், ஏறத்தாழ 1.00 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் பயணிக்கும் இடமாகவும் இருந்து வருகிறது. மேலும் இம்மாநகரை ஒட்டியும், இம்மாநகர் வழியாகவும் நாளொன்றுக்கு சுமார் 12000 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இம்மாநகருக்கு உள்ளும் மற்றும் இம்மாநகர் வழியாகவும் காய்கறி லாரிகள் மற்றும் இதர பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய சுமார் 15000 லாரிகள் இயக்கப்படுகின்றது. நாளொன்றுக்கு ஏறத்தாழ 1.00 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் பயணிக்கும் இடமாகவும் இம்மாநகர் இருந்து வருகிறது.

இதனால் போக்குவரத்து நெரிசல் சராசரியாக ஆண்டொன்றிற்கு இரண்டு சதவீதம் கூடுதலாகி வருகிறது. இம்மாநகரத்தில் ரயில், வானூர்தி, மற்றும் இதரப் போக்குவரத்துகளின் மூலம் தினந்தோறும் வந்து செல்லும் பயணிகள் மற்றும் யாத்ரீகர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து கொண்டே வருகிறது. மேலும், இம்மாநகரத்தில் அமையப்பெற்றுள்ள வான் ஊர்தி நிலையமானது பன்னாட்டு தரத்துடன் கூடிய அமைப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இது வணிக ரீதியாக பன்னாட்டு தரத்திற்கு இணையாகச் செயல்படும் நிலையமாக மாற்றுவதற்குத் தேவையான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வருங்கால இம்மாநகரத்தின் வளர்ச்சி (future expansion), அதிகரித்து வரும் மக்கள் தொகை, போக்குவரத்து நெரிசல் உள்ளிட்ட காரணங்களின் அடிப்படையில், இம்மாநகரத்தில் இயங்கி வரும் மத்தியப் பேருந்து நிலையத்தில் இடப்பற்றாக்குறையாக உள்ளதால், பேருந்துகள் வெளியில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நகரில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க பொதுமக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இம்மாநகரின் எதிர்கால வளர்ச்சி மற்றும் தேவை ஆகியவைகளின்

அடிப்படையிலும், இம்மாநகரத்தில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பது இன்றியமையாததாகும்.

இம்மாநகராட்சி எல்லையில் உள்ள பஞ்சப்பூரில் இம்மாநகராட்சிக்கு சொந்தமான 575 ஏக்கரில், கீழ்க்கண்ட நகரளவு எண்களை உள்ளடக்கிய 115.68 ஏக்கரில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | பழைய நில அளவை எண் | புதிய வார்டு | பிளாக் எண் | நகரளவு எண் | பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | கே.சாத்தனூர் | 242/3 | AP | 1 | 2/3 | 0.63 |
| 2 | | 239/7, 241 | AP | 1 | 1/9A Pt | 77.20 |
| 3 | | 244/1B2 Pt, 3A | AP | 1 | 4/1 Pt | 28.55 |
| 4 | பிராட்டியூர் (கி) | 173/2 Pt | AP | 1 | 2/5B | 9.30 |
| **மொத்தம்** | | | | | | **115.68** |

இவ்விடமானது மதுரை–சென்னை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளதால் உத்தேச பேருந்து நிலையத்தில் கீழ்கண்ட வசதிகள் ஏற்படுத்த இயலும் :-

1) நகர பேருந்து நிலையம்.
2) ஆம்னி பேருந்து நிலையம்.
3) லாரிகள் நிறுத்துமிடம் (Truck Terminal) அமைக்கவும்,
4) இருசக்கர மற்றும் நான்கு சாக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கவும்,
5) அத்தியாவசிய அடிப்படை வசதிகளான, தங்குமிடம், பொருட்கள் காப்பகம்,
6) வாகன எரிபொருள் நிரப்புமிடம், கழிவறை, காவல் நிலையம், சிற்றுண்டிக் கடைகள், கிட்டங்கிகள், பெட்டிக் கடைகள்,
7) நிர்வாக அலுவலகங்கள், தீயணைப்பு நிலையம், அஞ்சலகம்,
8) மருந்தகம், பொதுநல மையம், மின்பணி துணை நிலையம், குளிர்பதன கிட்டங்கி மற்றும் உதிரிபாகக் கடைகள்.

பஞ்சப்பூர் இடத்தில் தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள மேற்படி இடமானது, திருச்சி–கரூர், திருச்சி–திண்டுக்கல், திருச்சி–காரைக்குடி சாலைகள் மற்றும் சுற்றுச் சாலைகள் அமைய இருப்பதாலும் வெள்ள பாதிப்புகள் ஏற்பட சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை என்பதாலும், இந்த இடம் போக்குவரத்திற்கு ஏற்றதாக அமையும் என்பதால், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி இடத்தினை நெடுஞ்சாலைத் துறையின் வாயிலாக உத்தேச மதிப்பீடு ரூ.460.00 கோடியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கப்பெற்று மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் பராமரிப்பு செய்வதற்கும் மற்றும் மேற்கண்டுள்ள இதர பணிகளை மேற்கொள்வதற்கும் தனிஅலுவலர் அவர்களின் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொதுமக்கள் நலன் கருதி மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி இடத்தினை நெடுஞ்சாலைத் துறையின் வாயிலாக உத்தேச மதிப்பீடு ரூ.460.00 கோடியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கப்பெற்று மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் பராமரிப்பு செய்வதற்கும் மற்றும் மேற்கண்டுள்ள இதர பணிகளை மேற்கொள்வதற்கும் அனுமதி அளிக்கலாம்.

**கோப்பு எண்.இ1(மை)/4343/2021**

**தீர்மானம் எண்.418 (பொருள்–1): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – ப.மு.நெ. முஜிபுர் ரகுமான்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**